உ
சிவமயம்

# சிவபூமி

மாதாந்த செய்திப் பத்திரிகை
Monthly Journal of Sivapoomi

சிவம்–05 சுபகிருது வருடம் வைகாசித் திங்கள் மே 2024 பூமி–15





## எங்களை வாழ வைத்துக் கொண்டிருக்கும் விவசாயத்தை காப்பது தலையாய கடமை



வடக்கு கிழக்கு மாகாணத்தில் விவசாய செய்கை ஆனது தொடர்ந்து வீழ்ச்சி அடைந்து கொண்டு செல்கின்றது. தகுந்த ஆலோசணைகள் வழங்க எவரும் இல்லாத காரணத்தினால் தொடர்ந்தும் வடக்கு கிழக்கு மாகாணத்தை சார்ந்த மக்கள் பெரும் நஷ்டத்தினை எதிர்நோக்குகின்றார்கள். வடக்கில் விவசாயத்தில் ஈடுபடுகின்றவர்கள் மிகவும் குறைந்து செல்கின்ற நிலை காணப்படுகின்றது. மரவள்ளி போன்ற உள்ளூர் உப பயிர்களை உற்பத்தி செய்பவர்கள் மிக குறைவாக உள்ளனர். அதே நேரத்தில் வெங்காயம் போன்ற விளைச்சல் தரும் நிலங்கள் கட்டடங்களாக மாறிக் கொண்டு வருகின்றன. பல இடங்களில் போதிய விவசாய அனுபவம் இல்லாத காரணத்தினால் புதிய புதிய நோய்களில் இருந்து விவசாயிகள் பயிர்களை பாதுகாக்க முடியாமல்

தவிக்கின்றனர். கிழக்கிலும் பல்வேறு விதமான பிரச்சனைகள் காணப்படுகின்றன. அங்கு காட்டு யானைகளின் தொந்தரவினால் பலர் உயிரிழப்பினை சந்தித்த காரணத்தினால் பெரும்போக, சிறுபோக செய்கைகள் செய்வோர் தமது வயல் நிலங்களுக்கு செல்வதற்கு அஞ்சுகின்றனர். இக்காரணத்தினால் பல இடங்களில் வேளாண்மை குறைவடைந்து வருகின்றது. நெல்லுக்கான உத்தரவு விலையும் சரியான தீர்மானங்களும் தாமதமாக எடுக்கப்படுவதனால் போக செய்கையின் போது நெல்லை விற்பனை செய்ய முடியாது மிகவும் அவதியுற்றதை நாம் அறிவோம். எனவே வடக்கு கிழக்கு மாகாணத்திலிருந்து விஞ்ஞான, விவசாய துறை சார்ந்த ஏராளமான பட்டதாரிகள் வெளியேறிய போதிலும் விவசாய துறைக்கான தகுந்த ஆலோசனைகள் வழங்குபவர்கள் இல்லை. இலங்கை விவசாய திணைக்களத்தில் பல பிரதேச நிறுவனங்கள் செயற்பட்டு வருகின்ற போதிலும் அவற்றினாலும் விவசாயிகளின் பிரச்சனைகளை முறையாக தீர்க்க முடியவில்லை.

சமீப காலமாக தென்னந்தோட்ட செய்கையில் ஈடுபட்டுள்ளவர்கள் பெரும் நஷ்டத்தினை எதிர்நோக்கிக் கொண்டு இருக்கிறார்கள். தென்னை மரங்களுக்கு தொடர்ந்தும் புதிய பல்வேறு விதமான நோய்கள் ஏற்பட்டு வருகின்றன. அந்நோய்களுக்கான மருந்துகள் மிகவும் விலை கூடியவையாக காணப்படுகின்றன. அந்த மருந்துகளை எவ்வாறு தெளித்தாலும் உயரம் குறைந்த தென்னங்கன்றுகளுக்கு பாவிக்க கூடியதாக இருந்ததே தவிர 15,20 அடியை தாண்டி வளர்ந்த தென்னை மரங்களுக்கு பாவிக்க முடியாது போன காரணத்தினால் வடக்கில் பல தென்னைச் செய்கையாளர்கள் நஷ்டத்திற்கு ஆளாகியுள்ளனர். இத்தகைய சந்தர்ப்பங்களில் பல்கலைகழக விவசாய துறை சார்ந்த புத்தி ஜீவிகளும் விஞ்ஞான துறை சார்ந்த புத்தி ஜீவிகளும் விவசாய விரிவாக்க உத்தியோகத்தர்களும் இணைந்து கூட்டு முயற்சிகள் எடுத்து விவசாயிகள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளை தீர்க்க முன்வர வேண்டும். அத்தகைய முயற்சிகள் முறையாக இடம்பெறாத காரணத்தினால் வடக்கு, கிழக்கு விவசாய துறை வீழ்ச்சியை சந்தித்து கொண்டுள்ளது.

உள்ளூர் உற்பத்திகளுக்கான தகுந்த சந்தைப்படுத்தலுக்கான விலைவாய்ப்புகள் குறைவாக காணப்படுகின்றன. அதனால் பலர் நாளாந்த கூலி பணத்தினை கொடுத்து விவசாயத்தை மேற்க்கொள்ள முடியாமல் விவசாய நிலங்களை வெறும் தரிசு நிலங்களாக விட்டுள்ள நிலையும் காணப்படுகின்றது. அதுமட்டுமன்றி மழைவீழ்ச்சி குறைவாக கிடைக்கும் காரணத்தினாலும் பல்வேறு பிரச்சனைகளை விவசாயிகள் எதிர்நோக்குகின்றனர். இது இயற்கையுடன் போராட வேண்டிய நிலையை காட்டுகின்றது. புதிய நவீன விவசாய வளர்ச்சிகளை சிலர் அறிமுகம் செய்தாலும் உதாரணமாக


ஆசிரியர்
**கலாநிதி. செஞ்சொற்செல்வர். ஆறு. திருமுருகன்**

உதவி ஆசிரியர்
**திரு. ச.சந்தோஷன்**

வடிவமைப்பாளர்
**திரு. வ. குணநீதன்**


மாதுளம் கன்று நடுதல், இந்திய மாதுளச்செய்கை, இந்திய மல்லிகைக் கன்று செய்கை மற்றும் சொட்டு நீர்ப்பாசனத்தினூடாக சில பயிர்ச்செய்கை முயற்சிகள் இடம்பெற்ற போதிலும் அவை பெரிதளவில் விவசாயிகளின் வரவேற்பினை பெறவில்லை.

எனவே இச் சூழ்நிலையிலிருந்து எமது விவசாயிகளை காப்பாற்றுவதற்கு முறையான திட்டமிடல் வேண்டும். சரியான முறையில் சந்தைப்படுத்தலுக்கான வாய்ப்பினை ஏற்படுத்தி கொடுக்கவும் வேண்டும். மற்றும் விவசாய துறையில் பட்டம் பெறுகின்றவர்களுக்கு விவசாய நிலங்களை அரசாங்கம் வழங்க வேண்டும். வன்னிப் பகுதியில் உள்ள பயிர்ச்செய்கைக்கு உட்படாத நிலங்களை பல்கலைக்கழகத்திலிருந்து பட்டம் பெற்று வெளியேறுபவர்களுக்கு வழங்குவதோடு மானியங்களையும் கொடுத்து ஊக்குவிக்க வேண்டும். வளர்ந்த நாடுகளான கனடா, சோவியத் ரஷ்யா , இந்தியா போன்ற நாடுகள் விவசாய பட்டதாரிகளை மிகச் சரியான முறையில் பயன்படுத்துகின்றார்கள். ஆனால் எமது நாட்டிலோ, விவசாய பட்டதாரிகள் வங்கிகளுக்கோ அல்லது வேறு பதவிகளில் குறிப்பாக அவர்கள் பட்டம் பெற்ற பாடத்திற்கு சற்றும் தொடர்பில்லாத பாடங்களை கற்பிக்கும் ஆசிரியர்களாகவோ தொழில் புரிகின்றனர். இலவச கல்வி திட்டத்தின் கீழ் பல்கலைக்கழகத்தின் இத்தகைய பாடப்பரப்பை கற்பவர்கள் இந்நாட்டிற்கு பயனுள்ளவர்களாக காணப்படாவிடின் நாடு மென்மேலும் வீழ்ச்சியடைந்து கொண்டே செல்லும். எனவே விவசாய விஸ்தரிப்பு தொடர்பாக அரசாங்கத்தை முழுவதும் நம்பி இருக்காது வடக்கு கிழக்கு தமிழர்கள் ஒன்றிணைந்து மாற்று ஒழுங்குகளை கூட்டாக முயற்சிக்க வேண்டும். அது காலத்தின் கட்டாயமாகும்.

# ஊருக்காக வாழ்ந்த உத்தமன் பேராசிரியர் வித்தியானந்தன்




இலங்கையின் புகழ்பெற்ற தமிழ்ப் பேராசிரியர்களில் ஒருவரான பேராசிரியர் சுப்ரமணியம் வித்தியானந்தன் அவர்களின் நூறாவது பிறந்த தினம் (08.05.2024) அன்றாகும். இலங்கையில் தமிழ்மொழியின் வளர்ச்சிக்கும் தமிழ் இலக்கிய மேம்பாட்டுக்கும் பத்திரிகைத்துறை முன்னேற்றத்திற்கும் அளப்பரிய பங்களிப்பை நல்கியவராக விளங்கும் சு. வித்தியானந்தன் முன்னணி எழுத்தாளருமாவார். நூற்றுக்கும் மேற்பட்ட கட்டுரைகளை எழுதியுள்ள வித்தியானந்தனின் பல கட்டுரைகள் தொகுக்கப்பட்டு நூல்களாக வெளியிடப்பட்டுள்ளன. அவை இன்றும் பயன்மிக்க நூல்களாக விளங்கிக் கொண்டிருக்கின்றன.

இந்நாட்டின் வடமாகாணத்தில் அமைந்துள்ள யாழ்ப்பாணத்தில் 1924 ஆம் ஆண்டு மே மாதம் 08 ஆம் திகதி பிறந்த சு. வித்தியானந்தன், யாழ்ப்பாணம், வீமன்காமம் தமிழ்ப் பாடசாலையில் ஆரம்பக் கல்வியைப் பெற்றுக்கொண்டார். அதனைத் தொடர்ந்து தெல்லிப்பழை ஒன்றியக் கல்லூரி, பரி. யோவான் கல்லூரி, யாழ். இந்துக்கல்லூரி ஆகியவற்றில் இடைநிலைக் கல்வியைக் கற்ற இவர் இலங்கைப் பல்கலைக்கழகம், இலண்டன் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் உயர்கல்வியைப் பெற்றுக் கொண்டுள்ளார்.

சுவாமி விபுலானந்த அடிகள், பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை ஆகியோர் இவரது ஆசிரியர்களாக இருந்துள்ளனர். இலங்கைப் பல்கலைக்கழகத்தில் தமிழைச் சிறப்புப் பாடமாகக் கற்று கலைமாணி, முதுகலைமாணி ஆகிய பட்டங்களைப் பெற்ற முதல் கல்விமானாகவும் விளங்குகிறார். தனது 26 ஆவது வயதில் பிரித்தானியா சென்று இலண்டன் பல்கலைக்கழகத்தில் இணைந்து கற்று கலாநிதி பட்டம் பெற்றுக் கொண்ட இவர், அங்கிருந்து திரும்பியதும் தினகரனில் இலண்டன் பயணம் தொடர்பில் பயணக் கட்டுரையை எழுதினார். அத்தோடு 1950 முதல் தினகரன் எழுத்தாளர்களில் ஒருவராகவும் விளங்கினார் சு. வித்தியானந்தன். அதேநேரம் லேக் ஹவுஸ் நிறுவனம் வெளியிடும் தினகரன் பத்திரிகைக்கு பேராசிரியர் கைலாசபதி, ஆர். சிவகுருநாதன் ஆகியோரை அறிமுகப்படுத்தியவரும் இவரேயாவார். இலண்டன் பல்கலைக்கழகத்தில் கலாநிதி பட்டத்தை பெற்றுக் கொண்ட சு. வித்தியானந்தன் தாயகம் திரும்பிய பின்னர் பேராதனைப் பல்கலைக்கழக விரிவுரையாளராக இணைந்து கொண்டார்.

அதேநேரம், 1970 ஆம் ஆண்டில் மூன்றாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு பாரிஸில் நடத்தப்பட்டது. அம்மாநாட்டில் இலங்கையில் இருந்து கலந்து கொண்ட பேராசிரியர் வித்தியானந்தன், நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு 1972 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் நடைபெறுவதற்கு முன்னின்று உழைத்தவர்களில் ஒருவராகவும் விளங்குகிறார்.



இவை இவ்வாறிருக்க, 1977 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வளாகத்தின் தலைவராக நியமிக்கப்பட்டார் வித்தியானந்தன். அதன் பின்னர் 1979 ஜனவரியில் அவ்வளாகம் பல்கலைக்கழகமான போது அதன் முதலாவது துணைவேந்தரானார் அவர். பல்கலைக்கழக வளாகமாக இருந்த யாழ். பல்கலைக்கழகத்தை முழுமையான பல்கலைக்கழகமாக மேம்படுத்துவதற்கு அவர் அரும்பாடுபட்டு உழைத்தார். அத்தோடு பல்கலைக்கழக மாணவர்களது தேவைகளை நிறைவு செய்யக்கூடிய வகையில் அவர் அவ்வப்போது



கட்டுரைகளையும் எழுதினார். அக்கட்டுரைகளும் தொகுக்கப்பட்டுத் தனி நூல்களாக வெளியிடப்பட்டுள்ளன. பேராசிரியர்களான கா. சிவத்தம்பி, க. கைலாசபதி, பொ. பூலோகசிங்கம், ஆ. வேலுப்பிள்ளை போன்ற தமிழறிஞர்களும் இவரது மாணவர்களில் குறிப்பிடத்தக்கவர்களாவர். பேராசிரியர் வித்தியானந்தன் யாழ்ப்பாணம் வளாகத் தலைவராகவும் தொடர்ந்து மும்முறை யாழ் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராகவும் பணியாற்றியுள்ளார்.

இவ்வாறு அளப்பரிய சேவைகளை பேராசிரியர் வித்தியானந்தன் ஆற்றியுள்ளார். அவரது சேவைகளைக் கௌரவிக்கும் வகையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நூலகம் “பேராசிரியர் சு.வித்தியானந்தன் நூலகம்” என்று பெயரிடப்பட்டுள்ளது. அத்தோடு இலங்கைத் தபால் திணைக்களம் பேராசிரியர் வித்தியானந்தனுக்கு 1997 நவம்பர் 11 ஆம் திகதி நினைவு தபால் முத்திரையையும் முதல் நாள் காகித உறையையும் வெளியிட்டு கௌரவித்துள்ளது.

தமிழ்மொழிக்கும் தமிழ் இலக்கிய மேம்பாட்டுக்கும் மாத்திரமல்லாமல் பத்திரிகைத்துறை வளர்ச்சிக்கும் அளப்பரிய பங்களிப்பு நல்கியுள்ள பேராசிரியர் வித்தியானந்தனின் சேவைகள் இந்நாட்டு வரலாற்றில் அழியாத்தடம் பதித்துள்ளன. அத்தோடு அவரது பணிகள் என்றும் நினைவு கூரப்படக் கூடியவை என்றால் அது மிகையாகாது.

# யாழ் மருத்துவ பீட பிதாமகருக்கு யாழ் வைத்தியசாலையில் கௌரவம்

மறைந்த பேராசிரியர் வித்தியானந்தனின் குடும்ப உறவினர்களின் ஒழுங்கமைப்பில் எற்பாடு செய்யப்பட்ட அமரர் பேராசிரியர் வித்தியானந்தனின் பிறந்த தினத்தில், நூற்றாண்டினை காணும் வித்தியானந்தனின் திருவுருவப்படம் அருங்காட்சியகத்தில் திறந்து வைக்கும் நிகழ்வு 08.05.2024 யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில், கலாநிதி த.சத்தியமூர்த்தி மற்றும் மறைந்த பேராசிரியர் வித்தியானந்தனின் குடும்ப உறவினர்களின் தலைமையில் திறந்துவைக்கப்பட்டது. பின்னர் அமரரின் திருவுருவபடத்திற்கான திரைநீக்கம் செய்து வைத்ததுடன் மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர். இவ் நிகழ்வில் யாழ்ப்பாண பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி சு.ரகுராம், யாழ்ப்பாணம் தெல்லிப்பழை துர்க்கா தேவஸ்தான தலைவரும் சிவபூமியின் தலைவரும் ஆகிய ஆறு. திருமுருகன், வாழ் நாள் பேராசிரியர் சி.சிவலிங்கராஜா, பல்கலைக் கழக விரிவுரையாளர்கள், மறைந்த பேராசிரியர் வித்தியானந்தன் அறக்கட்டளை தலைவர் வி.கமலநாதன் உள்ளிட்ட குடும்ப உறவினர்கள் பலரும் பங்கெடுத்தனர்.








# இளைய தலைமுறை ஆற்றலாளர் விருது -2024

கலாநிதி ஆறு.திருமுருகன் பிறந்த நாள் அறநிதியச் சபையின் வருடாந்த கூட்டம் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான மண்டபத்தில் இடம்பெற்றது. இவ்வாண்டுக்கான விருது இவர்களுக்கு வழங்குவதென தீர்மானிக்கப்பட்டுள்ளது.


பலரின் உயிரைக்காக்கும் இருதய சத்திர சிகிச்சை நிபுணர். ஞா.காந்திஜி அவர்களுக்கும், 13வயதில் பாக்குநீரிணையை நீந்திக் கடந்து சாதனை நிலைநாட்டிய திருக்கோணமலை கோணேஸ்வராக் கல்லூரி மாணவன் ஹரிகரன் தன்வந்த் அவர்களுக்கும் இவ்வாண்டுக்கான விருது கொடுப்பதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.







## நல்லூர் ஆதீனத்தின் முதலாவது குருமகாசந்நிதானம்( மணிபாகவதர்)



படம் உதவி.
பேராசிரியர்
எஸ்.சிவலிங்கராஜா.









# வெயில் தானே என்று அலட்சியம் வேண்டாம்! அவதானம் மக்களே...!



வெயில் காலத்தில் வீட்டை விட்டு வெளியே சென்று, அதிக நேரம் வெயிலில் இருப்பதால் இந்த உடல் வெப்பம் இயல்பை விட அதிகரித்து 104 டிகிரி ஃபாரான்ஹீட்டுக்கு மேல் போகும் போது ஹீட் ஸ்ட்ரோக் ஏற்படுகிறது. வெயிலின் தாக்கத்தால் ஏற்படும் பாதிப்பினால், மனிதர்கள் அப்படியே மயங்கி சரிந்து விழுகின்றனர். இதனால் சில நேரங்களில் உயிரிழப்பும் ஏற்படுகிறது. குறிப்பாக 60 வயதுக்கு மேற்பட்டவர்கள், அதிக நேரம் வெயிலில் இருக்கும் போது மிக எளிதாக ஹீட் ஸ்ட்ரோக் பாதிப்புக்கு உள்ளாக நேரிடும். அதே போல 8 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கும் நீர்சத்து வற்றி, ஹீட் ஸ்ட்ரோக் பாதிப்பு வரும். சர்க்கரை நோய், உயர் ரத்த அழுத்தம், தைராய்டு உள்ளிட்ட இணைநோய் இருக்கும் நபர்களுக்கு ஹீட் ஸ்ட்ரோக் பாதிப்பு ஏற்படும் அபாயம் அதிகமாக உள்ளது.இதுமட்டுமின்றி, வெயிலில் அதிக நேரம் வெளியே வேலை செய்யும் நபர்களுக்கும் ஹீட் ஸ்ட்ரோக் ஏற்படக்கூடும்.



பாதுகாத்துக் கொள்ள என்ன செய்ய வேண்டும்?

இந்த பிரச்சனையை சரி செய்ய குளிர்ச்சியான உணவுகளை எடுத்துக்கொள்வது அவசியம். உணவில் எண்ணெய் குறைவாக இருப்பது அசிடிட்டி ஏற்படுவதை தவிர்க்க உதவும். சாதாரணமாக 2 முதல் 2.5 லிட்டர் தண்ணீர் குடிக்கும் மனிதர்கள், வெயில் காலத்தில் குறைந்தது 3 லிட்டர் தண்ணீரை தினமும் குடிக்க வேண்டும். அடிக்கடி இளநீர் குடித்தால், வயிற்றில் ிர் அளவு சீராக இருக்கும்.

# ஆரம்பமாகிறது கதிர்காமக் கந்தன் திருவிழா

வரலாற்றுச்சிறப்புமிக்க கதிர்காம கந்தன் ஆலய வருடாந்த ஆடிவேல் திருவிழா உற்சவம் எதிர்வரும் ஜூலை 5ஆம் திகதி வெள்ளிக்கிழமை (05-07-2024) கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, ஜூலை 21ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை (21-07-2024) தீர்த்த உற்சவத்துடன் நிறைவடையவுள்ளது.





# பாக்குத்தெண்டல் சடங்கு

வரலாற்று சிறப்பு மிக்க முல்லைத்தீவு வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தின் வைகாசி விசாகப் பொங்கல் செய்தியை ஆலயத்தோடு பண்டையகாலம் முதல் கொண்டு தொடர்புடைய குடும்பங்களுக்கு பாரம்பரிய முறைப்படி அறிவித்தல் வழங்கும் பாக்குத்தெண்டல் சடங்கு 06.05.2024 அதிகாலை இடம்பெற்றது.











# திருக்கேதீச்சரத்தில் திருநாவுக்கரசர் மேற்பார்வை செய்யும் உற்சவம்



13.05.2024 திங்கட்கிழமை ஆரம்பமான திருக்கேதீச்சரத்தின் மகோற்சவத்திருவிழா காலத்தில் சுவாமி வீதியுலா வருகைதரும் திருவீதியினை திருநாவுக்கரசுநாயனார் மேற்பார்வை செய்கின்ற உற்சவம் மிகவும் சிறப்பாக 10.05.2024 இடம்பெற்றது. உழவாரப் படையாளியான நாவுக்கரசர் தான் வாழ்ந்த ஆலயத்தில் திருக்கோவில் யாவற்றிலும் உள்ள புல் பூண்டுகளை செதுக்கி ஆலயப் பிரகாரத்தை சுத்தமாக வைத்திருந்தார். அவர் நினைவாக திருக்கேதீச்சரத் திருத்தலத்தில் இந்நிகழ்வு சம்பிரதாயபூர்வமாக இடம்பெறுகிறது.

# வரலாற்று நாயகன் பேராசிரியர் வித்தியானந்தனின் நூற்றாண்டு விழா

பேராசிரியர் சுப்பிரமணியம் வித்தியானந்தன் அறக்கட்டளை மற்றும் யாழ்ப்பாண தேசிய கல்வியற் கல்லூரி என்பன இணைந்து யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரி சரஸ்வதி அரங்கில் பேராசிரியர் வித்தியானந்தன் நூற்றாண்டு விழாவை நடத்தின.

கடந்த 11ஆம் திகதி மாலை 2 மணி தொடக்கமும் , மறுநாள் 12ஆம் திகதி காலை 9 மணி தொடக்கமும் நிகழ்வுகள் நடைபெற்றன. இந்நிகழ்வில் “பேராசிரியர் வித்தியானந்தனின் மனப்பதிவுகள்” கட்டுரைத் தொகுப்புநூல் வெளியிடப்பட்டது. யாழ். தேசிய கல்வியற் கல்லூரியின் முதலாவது பீடாதிபதி கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன் “விழுமியக் கல்வியின் தேவையும் போக்கும்” எனும் தலைப்பில் பேராசிரியர் வித்தியானந்தனின் நினைவுப் பேருரையை நிகழ்த்தினார். ஆசியுரை வழங்கிய கலாநிதி. ஆறு. திருமுருகன் அவர்கள் பேராசிரியர் வித்தியானந்தனின் முக்கியமான வரலாற்றுச் சம்பவங்களை சபையோருக்கு எடுத்துரைத்தமை கேட்போரை வியக்க வைத்ததோடு சிந்திக்கவும் வைத்தது.

அத்துடன் பேராசிரியர் வித்தியானந்தனின் அளிக்கை பாணியில், பேராசிரியர் சி. மௌனகுருவின் நெறியாள்கையில் இராவணேசன் கூத்து அளிக்கை மற்றும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி ஆசிரியர் து. அயூரனின் நெறியாள்கையில் காத்தவராஜன் கூத்து அளிக்கையும் இடம்பெற்றன. பேராசிரியர் சண்முகதாஸ் கூத்துப்பாடல் பாட பேராசிரியர் மௌனகுரு கூத்து அளிக்கை செய்த சிறப்பு நிகழ்வு அனைவர் கவனத்தையும் ஈர்த்தது. ஈழ மணித்திரு நாட்டின் இருபெரும் ஆளுமைகள் ஒரே மேடையில் வயோதிபத்தையும் தாண்டி கலைஞர்களாக மாறியமை காலமுள்ளவரை வரலாற்றில் பதிந்திருக்கும்.











# சிறப்புற இடம்பெற்ற தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலய மண்டலாபிஷேக பூர்த்தி வழிபாடுகள்

பங்குனி உத்திர திருநாளில் மகாகும்பாபிஷேகம் நடைபெற்று புதுப் பொலிவுடன் பிரமாண்டமான ஆலயமாக காணப்படும் தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயத்தின் மண்டலாபிஷேக பூர்த்தி வழிபாடுகள் கடந்த 09.05.2024 அன்று சிறப்பாக நடைபெற்றது. காலையில் விசேட வழிபாடுகளும் அபிசேகங்களும் இடம்பெற்று, மாலையில் ஊஞ்சலாடிய அம்பாள் அழகிய பூத்தண்டிகையில் வெளி வீதி வலம் வந்து அடியவர்களுக்கு அருள் புரிந்தாள்.















# தமிழ்ப் பேரறிஞருக்கு இதய அஞ்சலி



யாழ்ப்பாணம் மாவிட்டபுரம் பண்டிதர் கதிரிப்பிள்ளை உமாமகேசுவரன் ஞாயிற்றுக்கிழமை 21.04.2024 அன்று சிவபெருமான் திருவடி நீழலை அடைந்தார்.

பன்னிரு திருமுறை முழுவதையும், 1254 பதிகங்கள், 18,268 பாடல்கள், கோயில் வரலாறு, அருளாளர் வரலாறு, ஆசியுரைகள் என அச்சுப் பதிப்புக் காலங்களில் (1997-1998)மயிலாடுதுறை தருமபுரம் திருமடத்தில் ஓராண்டுக்கு மேலாகத் தங்கி இருந்தும், இரண்டாவது முறையாகத் தமிழகம் வந்து (2000-2001) சென்னை, தியாகராயநகர் தருமபுரம் திருமடக் கிளையில் பல மாதங்கள் தங்கி இருந்தும் மெய்ப்புப் பார்த்த பெருமகனார்.

தருமபுரம் ஆதீனம் 26ஆவது குருமகாசந்நிதானம் தவத்திரு சண்முக தேசிக ஞானசம்பந்த பரமச்சாரியாரின் ஆலோசகராக அக்காலங்களில் பணிபுரிந்தார். தமிழில் கற்றுத் துறை போதிய புலமையாளர். யாப்பு இலக்கணம் கைவரப் பெற்றவர். வடமொழியை நன்கு கற்றறிந்தவர். ஆங்கில மொழி ஆசிரியராக இலங்கையில் பல பாடசாலைகளில் பணிபுரிந்தவர். ஆங்கிலத்தில் வித்தகர்.

பன்னிரு திருமுறையின் 23 திருப்பண்களையும் வகை தெரிந்து பிரித்தறிபவர். ஒவ்வொரு பண்ணிலும் விரிவுகளையும் சார்புகளையும் வேறுபாடுகளையும் நுணுக்கமாக அறிந்தவர். இசைஞானத்தில் நுண்மா நுழைபுலத்தர். கர்நாடக இசையை நன்கு தேர்ந்தவர். சென்னையில் வாழ்ந்த காலங்களில் இசைக் கச்சேரிகளுக்குத் தனது உடல் நலக் குறைவையும் பாராது மாலை வேளைகளில் சென்று வருபவர்.

செதுக்கிச் செதுக்கிக் கூர்மையான யாழ்ப்பாணச் சைவத் தமிழ்ப் பண்பாட்டின் உச்ச நிலை அவரது இயல்பு. வலிந்து பேசார். இனிய சொற்களின் உறவாளர். எளிதில் எவருடனும் இணையார். இணைந்தால் பிரியார். பற்றுகள் குறைந்தவர். ஆகக் குறைந்த ஆசைகள் அவருக்கு. தவத்திரு சந்நிதானத்தின் முழுமையான ஆசீர்வாதத்தையும் வாழ்த்துக்களையும் பெற்ற திருமகனார். அவரோடு இணைந்து மெய்ட்ப்புப் பார்த்தவர்கள் ஏழாலை பண்டிதர் மு. கந்தையா அவர்களும் தருமபுரம் ஆதீனப் புலவர் வித்வான் க. ஆறுமுகம் அவர்களும்.

அன்னாரின் பிரிவு தமிழ் கூறும் நல்லுலகத்திற்கு மாபெரும் இழப்பாகும். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறையை பிரார்த்திக்கிறோம்.

# அருகி வரும் செண்பகத்தை காப்போம்



சித்திராப் பௌர்ணமி அன்று வல்வை இந்திர விழாவில் இராட்சத செண்பகம் காட்சிப்படுத்தப்பட்டது. மனிதனுக்கு தீங்கு விளைவிக்காத அதேநேரம், பூச்சி புழுக்களை மட்டும் உணவாக்கி, விவசாயத்தில் நன்மை பயக்கும் செண்பகம் தற்போது இங்கு வேகமாக அருகி வருகின்றது. ஈழத்தில் இந்த செல்லப் பறவை இவ்வாறு அருகிவருவதை கருத்தில் கொண்டு, "விழிப்புணர்வு" நோக்குடன் காட்சிப்படுத்தப்பட்டது.

# அபயத்தின் நிதிப்பங்களிப்பில் சிவபூமியின் மருத்துவப் பணி



எமது மண்ணில் மருத்துவத்துறை சார்ந்த வளர்ச்சி என்பது மிக முக்கியமானது. ஆரோக்கியமான வாழும் சூழலை உருவாக்க அதுவே முதன்மையானது. சுகாதார அபிவிருத்திக்கு அரச நிதி மட்டும் போதாது. தொண்டு நிறுவனங்களின் பங்களிப்பு மிக முக்கியமானது. இதனை பலகாலமாக சிவபூமி உணர்ந்து தன்னாலான பணிகளை செய்து வருகிறது.

அந்தவகையில் தெல்லிப்பழை ஆதாரவைத்தியசாலை சத்திரசிகிச்சைப் பிரிவுக்கு, நவீன Endoscopy கருவியை லண்டன் அபயம் அறக்கட்டளை உதவியோடு சிவபூமி நிறுவனத் தலைவர் செஞ்சொற்செல்வர் வழங்கினார்கள்.

# சிவபூமி முதியோர் இல்லத்தில் நிகழ்ந்த அப்பர் பெருமான் குருபூசை நிகழ்ச்சி

திருநாவுக்கரசு சுவாமிகள் குருபூசை சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் ஏற்பாட்டில் சிவபூமியின் தொல் புரத்தில் அமைந்துள்ள முதியோர் இல்லத்தில் திருநாவுக்கரசு நாயனாரின் குருபூசை நிகழ்வு மிகச்சிறப்பாக இடம்பெற்றது. ஆலயத்தில் பூசை வழிபாடுகள் இடம்பெற்று, மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. முதியோர்களுக்கு அந்த நாள் மிக்க மகிழ்ச்சியானதாக அமைந்திருந்தது.












# ஆரம்பமாகியது கதிர்காம பாத யாத்திரை



வருடாந்த கதிர்காம மகோற்சவத்தை முன்னிட்டு ஸ்ரீ செல்வச்சந்நிதியிலிருந்து கதிர்காமத்திற்கான பாதயாத்திரை 11.05.2024 ஆரம்பமாகியது. காலை ஆலயத்தில் இடம்பெற்ற விசேட பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து யாத்திரையை ஆலயத்திலிருந்து ஆரம்பித்து சந்நிதியான் ஆச்சிரமத்திற்கு வந்து அவர்களுக்கான காலை உணவினை முடித்து ஆச்சிரமத்தில் இடம்பெற்ற விசேட பூசையினை முடித்து அவர்களுக்கு வழிச் செலவுக்காக பங்குகொள்ளும் அனைவருக்கும் ஆச்சிரம சுவாமிகளால் சிறு தொகைப் பணமும் வழங்கி யாத்திரையை ஆரம்பித்து வைத்தார்






# குப்பிளான் சிவபூமி ஞான ஆச்சிரமத்தில் நிகழ்ந்த அப்பர் பெருமான் குருபூசை நிகழ்வு

திருநாவுக்கரசு நாயனார் குருபூசை நிகழ்வு 03.05.2024 அன்று குப்பிளானில் உள்ள சிவபூமி ஞான ஆச்சிரமத்தில் பக்தி பூர்வமாக இடம்பெற்றது.





இந்தப் பத்திரிகை சிவபூமி அறக்கட்டளையால் வெளியிடப்பட்டுள்ளது.(வைகாசி 2024) ISBN-978-955-7420-00-4